**சிலாபம் நகர சபை**

**புத்தளம் மாவட்டம்**

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1 **நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 03 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சிலாபம் நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வங்கி மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய வட்டி வருமானம் ரூபா 778,803 ஆக இருந்த போதிலும் ரூபா 1,557,605 என கணக்கீடு செய்யப்பட்டமையால் வட்டி வருமானம் ரூபா 778,802 ஆல் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட அறவித்தல் கடை வாடகை வருமானம் ரூபா 14,718,676 ஆக இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 10,929,507 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட கடை வாடகை வருமானம் ரூபா 8,370,948 ஆக இருந்ததுடன், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 4,067,684 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய மாகாண குறித்துரைக்கப்பட்ட வருமான கொடை நிதியத்தின் கீழ் ரூபா 1,691,050 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

18 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டு கணக்கின் பிரகாரமான மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளுக்கு இடையே ரூபா 65,403,264 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டன.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருடக் கணக்கில் இருந்து முன்கொண்டு வரப்படும் ரூபா 8,871,877 ஆன முற்பணக் கொடுப்பனவு பெறுமதி தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 70,070,708 தொகையாக இருந்ததுடன் அதில் 2005 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 13,944,828 ஆன கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து உள்ளூராட்சி மன்ற ஆணையாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 501,568 தொகையான நிலுவை களியாட்ட வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நகர சபையின் 05 சொத்துக்களை 2014 ஆம் ஆண்டிற்கு முன்னர் குத்தகைக்கு வழங்கியமைக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 591,631 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 234,901,323 பெறுமதியான 08 கணக்கு விடயங்களுக்குரிய விரிவான பட்டோலைகள், பொருள் மெய்மையாய்வு அறிக்கை, பொழிப்பறிக்கைகள் மற்றும் காலப்பகுப்பாய்வு போன்ற சான்றுகள் இல்லாமை காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| நிதிப்பிரமாணம் 571 | வைப்பு மீதிகளில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 10,233,348 பெறுமதியான காலாவதியான வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கோ அல்லது தேவையான சீராக்கங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி செயலாற்றுகை

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நகர சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 21,969,182 ஆக காணப்பட்டதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 47,861,605 ஆக காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகளில் ரூபா 69,830,787 ஆன வீழ்ச்சிக்காக நான்கு வருமான விடயங்களில் ரூபா 28,219,223 குறைவொன்றும் மூன்று செலவின விடயங்களில் ரூபா 51,279,780 ஆல் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டின் இறுதியின் போது சேகரிக்கப்பட வேண்டிய வீத வரி வருமானத்தில் 64 சதவீதமும் குத்தகை வருமானத்தில் 27 சதவீதமும் கடை வாடகை வருமானத்தில் 68 சதவீதமும் சேகரிப்பதற்கு சபை தவறியிருந்தது..

#### 2.3.2 வீதவரி மற்றும் வரி

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 31,878,914 தொகையான வீதவரி நிலுவை உரிய காலப்பகுதியில் சேகரித்துக் கொள்ளும் பொறுப்பு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

#### 2.3.3 குத்தகை வாடகை

மீளாய்வாண்டின் இறுதியில் குத்தகை வாடகை ரூபா 6,096,794 தொகையான நிலுவை காணப்பட்டதுடன், அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 ஏனைய வருமானம்

-----------------------------------

மீளாய்வாண்டில் இறுதியில் ரூபா 22,898,519 ஆக காணப்பட்டதுடன், அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 முத்திரைக் கட்டணம்

------------------------------------------

மீளாய்வாண்டின் இறுதியில் மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 44,290,255 ஆன முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------------

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

-----------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 ஆம் ஆண்டின் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு 2013 பெப்ரவரி மாதம் முதல் வாடகை திருத்தம் தொடர்பாக வருமான பதிவேடு பேணப்பட்டிருந்த போதிலும், அத்திருத்த கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 19,867,449 ஆன கடை வாடகை நிலுவையாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் எவ்வித வாடகையொன்றையும் செலுத்தாத 94 குத்தகையாளர்கள் காணப்பட்டனர். அந்த ஒவ்வொரு நபரினதும் நிலுவை கடை வாடகை ரூபா ஒரு இலட்சம் முதல் 09 இலட்சம் வரை வீச்சில் காணப்பட்டதுடன் இத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வியாபாரத்திற்காக வரி அறவிடும் போது அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் புதிய வியாபாரங்களை இனங்கண்டு அவ்வியாபாரங்களிலிருந்து பட்டியலிடப்பட்ட வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நகர சபை அதிகாரப்பிரதேசத்தில் வெவ்வேறு செயற்பாடுகளுக்காக அறிவித்தல் பலகை மற்றும் நிரந்தர அறிவித்தல் பாதாகைகளுக்காக கட்டணம் அறவிடுவதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் வழங்காமை காரணமாக அதன் மீதான வருமானம் நகர சபைக்கு இழக்கப்பட்டிருந்தது.

(உ) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே நிர்மாணங்களுக்காக 84 திட்டங்கள் மற்றும் 97 திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 மே 04 ஆந் திகதி வரையிலும் இணக்கச் சான்றிதழ்கள் முறையே 03 மற்றும் 08 இற்கு மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன. இணக்கச் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளாத நிர்மாணங்களுக்காக அபிவிருத்தி அனுமதிப்பத்திர செல்லுபடிக் காலம் நீடிக்கப்படாதிருந்ததுடன் சபையினால் அது தொடர்பான பரிசோதனையொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்ட

நிர்மாணங்களுக்காக தற்காலிக மதிப்பீடொன்றும் மேற்கொள்ளப்பட்டு வீத வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சிலாபம் மீன் சந்தை 2016 ஆம் ஆண்டிற்காக ரூபா 7,100,100 தொகைக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு பெறுகை நடவடிக்கை மூலம் நபர் ஒருவர் முன்வந்திருந்த போதிலும் 2017 ஏப்ரல் மாதம் 11 ஆந் திகதி வரையிலும் நகர சபை அவருடன் ஒப்பந்தமொன்றை மேற்கொண்டிருக்கவில்லை. எனினும் இக்குத்தகையாளர் மீன் வியாபாரத்தில் கட்டணங்களை சேகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததுடன் சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 2,141,873 தொகையை அறவிடுவதற்கு சபை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

## 3.2 சர்ச்சக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

---

வீதவரி நிலுவை அறவிடும் போது பிடியாணைக் கட்டணம் கணக்கிடப்பட்டு நிலுவை வீதவரி தவணை மாத்திரம் அறவிடும் நடைமுறையொன்று சபை பின்பற்றியிருந்ததால் சபைக்கு நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 3.3 திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவும்

---

நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படும் 16 தொன் அளவிலான கழிவுப்பொருட்கள் திறந்த வெளியில் இடப்படுவதால் சுற்றாடல் பிரச்சினைகள் மற்றும் சிக்கல்கள் அதிகரித்து வந்தன.

## 3.4 மனித வளமுகாமைத்துவும்

---

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறன ஊழியர் எண்ணிக்கையின் பிரகாரம் நிறைவேற்றுத் தரத்தில் வெற்றிடமொன்றும் இரண்டாம் தரத்தில் 53 வெற்றிடங்களும், ஆரம்ப தரத்தில் 36 மிகைகஷளம் காணப்பட்டன.

## 4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---

## 4.1 செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்தலும் செயற்படுத்தலும்

---

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் சபையினால் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் | காணி மற்றும் கட்டிடங்களின் நிலைத்திருதன்மை மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | கடன்பட்டோர் | பழைய கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கோ அல்லது கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கோ தேவையான நடவடிக்கையும் எடுக்கவில்லை. |
| (இ) | கடன்பட்டோர் | பழைய கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கோ அல்லது கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கோ தேவையான நடவடிக்கையும் எடுக்கவில்லை. |
| (ஈ) | வருமானம் | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | பாதீடு தயாரித்தல் | பாதீடு மட்டுப்படுத்தப்பட்ட காரணியொன்றாக இல்லாமல் இருந்ததுடன் தேவையற்ற வகையில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (ஊ) | கணக்குகளைத் தயாரித்தல் | கணக்குகளை தயாரிப்பதற்கான விபரங்கள் உரிய பிரிவுகளிலிருந்து சரியான முறையில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |